# சாலைப் பணிகள் குறித்து நேரடி ஆய்வு நடத்த முதல்வர் முடிவு! ...

முதல் பக்கத் தொடர்ச்சி

பெருங்குடி மண்டலம், ராம் நகர் பகுதியில் சுமார் 175 எண்ணிக்கையிலான சாலைகள், குடிநீர் மற்றும் கழிவுநீர் குழாய் பதிக்கும் பணிக்காக சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்றும் வாரியத்தால் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதில் அனைத்து குழாய் பதிக்கும் பணிகளும் முடிக்கப்பட்டுள்ளன. ராம் நகர் 7வது குறுக்கு தெருவில் மாநில நிதி ஆணைய நிதியின் கீழ், சுமார் 700 மீட்டர் நீளம் மற்றும் 6 மீட்டர் அகலத்திற்கு 51 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளையும்;

ராம் நகர் 3வது பிரதான சாலை மேற்கு பகுதியில், சிமெண்ட் கான்கிரீட் கலவை கொண்டு சாலை வெட்டு சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ள திட்டமிடப்பட்டு சுமார் 310 மீட்டர் நீளம் மற்றும் 1 மீட்டர் அகலத்திற்கு வைப்பு நிதியின் கீழ், 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளையும்;

ராம் நகர் 3வது பிரதான சாலை கிழக்கு பகுதியில், சுமார் 350 மீட்டர் நீளம் மற்றும் 5 மீட்டர் அகலத்திற்கு மாநில நிதி ஆணைய நிதியின் கீழ், 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் தார் சாலை அமைக்கும் பணிகளையும் முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இச்சாலைப் பணிகளால் இப்பகுதியை சேர்ந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் பயன்பெறுவார்கள்.

**நெடுஞ்சாலைத் துறை சார்பில் மணப்பாக்கம் – கொளப்பாக்கம் கிருகம்பாக்கம் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை ஆய்வு செய்தல்**

கோடம்பாக்கம், ஸ்ரீபெரும்புதூர் சாலை முதல் கொளப்பாக்கம் வழியாக மணப்பாக்கம் செல்லும் 5.6 கி.மீ நீளமுள்ள நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த இந்தச் சாலையில், சென்னை குடிநீர் வடிகால் வாரியம் மூலமாக 2.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு குழாய் அமைக்கும் பணியும், இதே சாலையில் 330 மீட்டர் நீளத்திற்கு பொதுப்பணித் துறையின் நீர் வள ஆதாரத்துறை மூலமாக வடிகால் அமைக்கும் பணியும் மேற்கொள்ளப்பட்டன. இதனால் இச்சாலை முழுவதும் பழுதடைந்து போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக இருந்தது. குழாய்கள் அமைக்கும் பணி முடிக்கப்பட்டவுடன் நெடுஞ்சாலைத்துறையால் இச்சாலை போர்க்கால அடிப்படையில் 4 கோடியே 5 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சீரமைப்பு பணி மேற்கொள்ளப்பட்டு, தற்போது சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இப்பணிகள் அனைத்தும் முடிவடையும் தருவாயில் உள்ளது.

இச்சாலை பணியால் கிரு கம்பாக்கம், கொளப்பாக்கம், குன்றத்தூர், முகலிவாக்கம் மற்றும் இதனை சுற்றியுள்ள பகுதிவாழ் மக்கள் சுமார் 1 இலட்சம் பேர் பயனடைவார்கள்.

**நெடுஞ்சாலைத் துறை சார்பில் ராமாபுரம் – திருவள்ளுவர் சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சாலைப் பணிகளை ஆய்வு செய்தல்**

திருவள்ளூர் நெடுஞ்சாலை கோட்டம், அம்பத்தூர் உட்கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பூந்தமல்லி நெடுஞ்சாலை பிரிவைச் சார்ந்த மாவட்ட முக்கிய சாலையான வளசரவாக்கம் – இராமாபுரம் (வழி) வள்ளுவர் நகர் சாலையின் நீளம் 3 கி.மீ ஆகும்.

இச்சாலையானது கோடம்பாக்கம் – ஸ்ரீபெரும்புதூரில் (கி.மீ.0/2) தொடங்கி மவுண்ட் – பூந்தமல்லி – ஆவடி சாலையில் (கி.மீ. 3/2) முடிவடைகிறது. மேற்படி சாலையில் திட்டமிடப்பட்ட 2.6 கி.மீ நீளம் வடிகால்வாய் கட்டும் பணியில் 1.95 கி.மீ நீளம் வடிகால்வாய் பணி முடிக்கப்பட்டு மழைநீரானது தங்கு தடையின்றி நந்தம்பாக்கம் கால்வாயில் சென்றடைகிறது. மேலும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் 2.20 கி.மீ நீளத்திற்கு நடைபெற்ற பாதாள சாக்கடை மற்றும் குடிநீர் குழாய் பதிக்கும் பணி முடிவுற்று தற்போது தார் சாலை அமைக்கும் பணியானது மறுசீரமைப்புத் திட்டத்தின் கீழ் (Restoration) 2 கோடியே 23 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் முடிக்கப்பட்ட சாலைப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இச்சாலைப் பணியால் கலைஞர் கருணாநிதி நகர், அசோக் நகர், ஆழ்வார்திருநகர், வளசரவாக்கம், நெற்குன்றம் மற்றும் அதை சுற்றியுள்ள பகுதி வாழ் மக்கள் சுமார் 5 இலட்சம் பேர் பயனடைவார்கள்.

மேலும், முதலமைச்சர் அவர்கள் வளசரவாக்கம் முதல் வடபழனி சிக்னல் வரை நடைபெற்று வரும் சாலைப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அப்போது, அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சென்னை மெட்ரோ இரயில் அமைந்துள்ள சாலைப் பணிகளை சீர்செய்திடவும், காலதாமதமில்லாமல் விரைந்து முடித்திட வேண்டும் என்று மெட்ரோ இரயில் அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

**அதிகாரிகளுக்கு முதல்வர் வழங்கிய அறிவுரை!**

சாலைப் பணிகளை ஆய்வு மேற்கொண்ட முதலமைச்சர் அவர்கள், அனைத்து பணிகளையும் வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக தாமதப்படுத்தாமல் முடிக்கப்பட வேண்டும் என்றும், நகராட்சி நிர்வாகத் துறை, நெடுஞ்சாலைத் துறை, ஊரக வளர்ச்சித் துறை ஆகிய துறைகளின் அலுவலர்கள், போக்குவரத்து காவல்துறை, மின்வாரியம், குடிநீர் வழங்கல் வாரியம், தொலைதொடர்புத் துறை மற்றும் சென்னை மெட்ரோ இரயில் அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து பணியாற்றி, சாலைப் பணிகளை விரைந்து முடித்திட வேண்டும் என்றும் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

சாலைப் பணிகளை பார்வையிட்ட பின்னர், முதலமைச்சர் அவர்கள் முகாம் அலுவலகத்தில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர், சென்னை மெட்ரோ இரயில் மேலாண்மை இயக்குநர் மு.அ. சித்திக், சென்னை மெட்ரோ இரயில் திட்ட இயக்குநர் அர்ஜுனன், முதன்மை பொது மேலாளர் அசோக் குமார் ஆகியோருடன் சென்னை மாநகரில் மெட்ரோ இரயில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடங்களில் சாலை சீரமைப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் அரவிந்த் ரமேஷ், க. கணபதி, துணை மேயர் மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, கூடுதல் தலைமைச் செயலாளர் / பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு. ஜெ. ராதாகிருஷ்ணன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி இணை ஆணையர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தஞ்சாவூர் மாவட்டம் தமிழ்ப் பல்கலைக் கழக வளாக பேரவைக் கூட்டரங்கில் தொல்லியல் துறை சார்பில் அண்மைக்கால ஆய்வுகள் காட்டும் தமிழ்நாட்டு வரலாறு என்னும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு மாநிலக் கருத்தரங்கினை நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் தங்கம்தென்னரசு நேற்று முன்தினம் (21.09.2023) துவக்கி வைத்து அண்மைக்கால ஆய்வுகள் காட்டும் தமிழ்நாட்டு வரலாறு என்ற ஆய்வுக் கட்டுரையினை வெளியிட்டார். பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப் , திருவையாறு சட்டமன்ற உறுப்பினர் துரை.சந்திரசேகரன், தமிழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் திருவள்ளுவன் , மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன் , துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### நாகை – காங்கேசன்துறை இடையே அக்டோபரில்

# பயணிகள் கப்பல் போக்குவரத்து துவங்கும்!

## நாகை துறைமுக ஆய்வுக் கூட்டத்தில் அமைச்சர் எ.வ.வேலு தகவல்!

நாகை, செப். 23 -

“நாகை-காங்கேசன்துறை இடையே அக்டோபரில் பயணிகள் கப்பல் போக்குவரத்துத் துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது” என்று அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்துள்ளார்.

நாகப்பட்டினம் துறைமுகத்தில் நடைபெற்று வரும் பணிகள் ஆய்வு மற்றும் நாகப்பட்டினம் (இந்தியா) காங்கேசந்துறை (இலங்கை) பயணியர் படகு போக்குவரத்து துவங்குதல் தொடர்பாக ஆய்வு கூட்டம் பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் 20.09.2023 அன்று நடைபெற்றது. உடன் கூடுதல் தலைமைச் செயலர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு கடல்சார் வாரியம் துணைத்தலைவர் மற்றும் தலைமை செயல் அலுவலர் எஸ்.நடராஜன், தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழக தலைவர் என்.கௌதமன், தமிழ்நாடு தாட்கோ கழக தலைவர் உ.மதிவாணன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி. நாகை மாலி ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:

நாகப்பட்டினம் சிறு துறைமுகத்திலிருந்து 60 கடல் மைல்கள் தொலைவில், இலங்கையிலுள்ள காங்கேசந்துறை முகத்திற்கு 150 பயணிகள் பயணிக்கும் விரைவு பயணியர் கப்பல் (High Speed Passanger Ferry) இயக்குவதற்கான நடவடிக்கைகள் தமிழ்நாடு கடல் சார் வாரியம், ஒன்றிய அரசின் துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து துறை மற்றும் வெளியுறவு துறை மூலம் நாகப்பட்டினம் துறைமுக கால்வாய் தூர்வாருதல், பயணியர் முனையம் அமைப்பது போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள இந்திய கப்பல் போக்குவரத்துக் கழகம் (Shipping Corporation Of India), விரைவு பயணியர் கப்பல் போக்குவரத்தை நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. மேலும் இந்த பயணியர் கப்பல் பயணம், வெளிநாட்டு பயணம் என்பதால் ஒன்றிய அரசின் தொழில் துறை பாதுகாப்பு அதிகாரிகள் (CISF) மூலம் கையாள ஒன்றிய அரசிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.



நாகப்பட்டினம் துறைமுகத்தில் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு அக்டோபர் மாதம் முதல் வாரத்தில், தமிழ்நாடு அரசுடன் இணைந்து பயணிகள் கப்பல் போக்குவரத்தினை துவக்க ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளது.

இந்த வரலாற்று சிறப்பு மிக்க பயணிகள் கப்பல் போக்குவரத்து, இலங்கை மக்கள் குறிப்பாக, தமிழ் மக்கள் தங்களின் கல்வி, மருத்துவம், உணவு பொருட்கள், வணிகம், ஆன்மீகம் மற்றும் சுற்றுலா ஆகிய தேவைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைவதுடன், தமிழ்நாட்டில் உள்ள டெல்டா மாவட்டங்கள் குறிப்பாக ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்ட பகுதிகள், கலாச்சார பகிர்வு, பொருளாதாரம் ஆகியவற்றில் மிகப்பெரிய வளர்ச்சியை பெறும்.

மேலும், ஒன்றிய அரசின் கட்டுப்பாட்டிலுள்ள சுங்கத் துறை, வெளியுறவுத் துறை, குடிமைத்துறை, கப்பல் பேரியக்கத் துறை, இந்திய கப்பல் போக்குவரத்துக் கழகம் ஆகியோர் இந்த வரலாற்று சிறப்பு மிக்க குறிப்பாக தமிழர்கள் வசிக்கும் வட இலங்கை துறைமுகமான காங்கேசந்துறைக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்தினை துவக்க அனைத்து ஒத்துழைப்பினையும் வழங்குமாறு பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது தலைமை செயற்பொறியாளர் (நெடுஞ்சாலைத்துறை) பொறிஞர் சந்திரசேகர், மாவட்ட ஊராட்சித்தலைவர் திருமதி ச.உமாமகேஸ்வரி, மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி ரா.பேபி, மாநில துறைமுக அலுவலர் கேப்டன் ம.அன்பரசன், நாகப்பட்டினம் துறைமுக அலுவலர் கேப்டன் ஜோ.மானேக்ஷா, செயற்பொறியாளர் (குடிமை) பொறிஞர் க.ரவிபிரகாஷ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் மீ.செல்வகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சாதனை படைத்த

# தமிழ்நாட்டு விஞ்ஞானிகள் இந்தியும் சமஸ்கிருதமும் படிக்கவில்லை!

## மாநிலங்களவையில் சந்திரயான் வெற்றியைப் பாராட்டி திருச்சி சிவா பேச்சு!

புதுடெல்லி, செப். 23 -

“சாதனை படைத்த தமிழ்நாட்டு விஞ்ஞானிகள் இந்தியும் சமஸ்கிருதமும் படிக்கவில்லை” என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கழகக் குழுத் தலைவர் திருச்சி சிவா கூறினார்.

இது குறித்து அவர் மாநிலங்களவையில் பேசியதாவது:-

இந்தியாவின் வியக்கத்தக்க விண்வெளி வெற்றியை, சந்திரயான் 3 விண்கலத்தின் சாதனையை பேசும் விவாதத்தில் இந்தியக்குடிமகன் என்ற பெருமிதத்தோடு பங்கேற்கிறேன். பாரதக் குடிமகனாக அல்ல.

சந்திரயான் விண்கலம் சந்திரனில் தடம் பதித்து கருவிகளெல்லாம் சிறப்பாக செயலாற்றுவதை உலகமே போற்றும் பெருமைக்குரிய தருணமிது. ஆனால் இந்த புதிய பாராளுமன்றத்தில்இரண்டு நாட்களாக கொந்தளிப்பான சூழலில் நாம் நுழைந்திருக்கிறோம். அது சந்திரன். இது நாடாளுமன்றம்.

நிலவின் தென்துருவத்தில் தடம்பதித்த முதல் நாடு இந்தியா என்பதை உலகமே கொண்டாடுகிறது. இத்திட்டத்தின் வெற்றி மூலம் இந்திய விண்வெளி ஆய்வுத் துறை உலக அரங்கில் பெரியளவில் பாராட்டப்படுகிறது. இந்திய விண்கலங்கள் வெற்றிப்பயணத்தின் மைல் கற்கள். இதற்கு காரணமான இஸ்ரோ குழுவின் ஆர்வம் மற்றும் அர்ப்பணிப்பே உலக அரங்கில் நம் பெருமையை உயர்த்தியிருக்கிறது.

முதல் விண்கலம் செலுத்திய விக்ரம் சாராபாய் அவர்களை தொடக்கமாகக் கொண்ட நீண்ட நெடிய பயணமிது. இன்று உச்சத்தை தொட்டிருக்கிறது. சாதி மத உணர்வுக்கு அப்பாற்பட்ட நாடு இந்தியா. சந்திரான்-3 திட்ட இயக்குநர் வீரமுத்துவேல் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர். அரசுப்பள்ளியில் படித்தவர். கோவையிலும் திருச்சி NITயிலும் பொறியியல் பயின்றவர். விண்வெளி பற்றி ஆர்வம்கொண்டு படிப்பவர்களுக்கு உதாரணமாக ஜொலிக்கிறார்.

சந்திரயான்-3 திட்ட இயக்குநர்களில் ஒருவராக சீரிய முறையில் பணியாற்றிய சங்கரன் நான் அரசுக்கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தபோது அதே கல்லூரியில் எனக்கு இளையவராக(Junior) ஆக படித்தவர். அவரை எங்கள் கல்லூரிக்கு அழைத்து பாராட்டவிருக்கிறோம். அவரை நான் நேரில் சந்தித்து வாழ்த்தலாம். ஆனால் இந்த அவையில் அவரது பெயரை குறிப்பிட்டு வாழ்த்துவது பெருமைக்குரியது. சாலப் பொருத்தமானது.



சந்திரயான்-2 திட்ட இயக்குநர் திருமதி.வனிதா முத்தையா தமிழ்நாட்டின் சென்னையைச் சார்ந்தவர். சாதாரண நடுத்தர வர்க்கத்தை சார்ந்த இவர் அரசுப்பள்ளியில் படித்தவர். பொறியியலையும் தமிழ்நாட்டிலே படித்தவர்.

சந்திரயான் - 1 திட்ட இயக்குநர் மயில்சாமி அண்ணாதுரை “நிலா மனிதன்” என அழைக்கப்படுபவர். 1969 அப்பல்லோ விண்கலத்தில் ஆம்ஸ்ட்ராங் நிலவுக்கு சென்று திரும்பினார். ஆனால் மயில்சாமி அண்ணாத்துரையின் சந்திரயான் -1 நிலவைத் தொட்டதும், அங்கே நீர் இருப்பதை உறுதி செய்ததும் உலகையே உலுக்கிப் போட்டது.

வெற்றிகரமாக 16 செயற்கைக்கோளை விண்ணில் ஏவி இஸ்ரோவில் சாதனை படைத்தவர். தமிழ்நாட்டைச் சார்ந்தவர். எளிய குடும்பத்தில் பிறந்தவர். அரசுப்பள்ளியில் படித்தவர். தற்போது சூரியனை ஆய்வுசெய்யும் ஆதித்யா -1 திட்ட இயக்குநர் திருமதி. நிஷா ஷாஜி சுல்தானா தமிழ்நாட்டின் தெற்குப் பகுதியான செங்கோட்டையை சார்ந்தவர். சாதாரணக் குடும்பத்தில் பிறந்து அரசுப்பள்ளியில் படித்தவர்.

சாதனை படைப்பவர்கள் மேல்நாட்டில் படிக்க வேண்டியதில்லை அரசுப்பள்ளியில் படித்தாலே போதும் என்பதை நிரூபித்த சாதனையாளர்கள் இவர்கள். அனைவரும் தமிழ் வழியில் பயின்றவர்கள். இரண்டாவது மொழியாக ஆங்கிலம் கற்றவர்கள். இவர்கள் யாருக்கும் இந்தியோ சமஸ்கிருதமோ தெரியாது.

இந்திய விண்வெளி ஆய்வுத்துறையை வளர்ந்த நாடுகளே வியகுமளவுக்கு உயர்த்திய இவர்கள் சாமானிய குடும்பத்தவர்கள். தாய்மொழியில் படித்தவர்கள். இணைப்பு மொழியாக ஆங்கிலம் கற்றவர்கள். பல சாதனைகளை படைத்தவர்கள். இஸ்ரோ தலைவராக இருந்த கன்னியாகுமரியைச் சேர்ந்த சிவன், தற்போதைய சோம்நாத் போன்றவர்களிடமிருந்து நாம் இவற்றை அறிந்து கொள்கிறோம். ஒட்டுமொத்த இந்தியாவே பாராட்டியது. நாடாளுமன்றம் வாழ்த்தியது. திமுக சார்பில் நான் வாழ்த்தினேன்.

சந்திரயான்-3 இலக்கை தொட்டதும் வீரமுத்துவேலை அழைத்து நேரில் பாராட்டினார் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். நாடாளுமன்றமும் அவர்களை பாராட்ட வெகுமதியளிக்க கடமைப்பட்டுள்ளது. காரணம் இந்திய விண்வெளி ஆராய்ச்சியை குறிப்பிடத்தக்க அளவுக்கு உயர்த்தியவர்கள் அவர்கள். இத்தகைய சிறப்புடைய இஸ்ரோ விஞ்ஞானிகளை நாடாளுமன்றத்தில் பாராட்டி ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்ற வேண்டுமென்று முன்மொழிகிறேன். அவை உறுப்பினர்களும் ஏற்பார்கள். அவைத்தலைவர் அவர்களே உங்கள் வாயிலாக அமைச்சரையும் அவ்வாறான தீர்மானம் நிறைவேற்ற கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு திருச்சி சிவா பேசினார்.

### முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கு தகுதி மதிப்பெண் பூஜ்ஜியம் என அறிவித்த நிலையில்

# ‘நீட்’ நுழைவுத் தேர்வுக் கட்டணம் மூலம் ஒன்றிய அரசு ஆண்டுக்கு ரூ.100 கோடி வசூல்!

## பணம் வசூலிக்கத்தான் தேர்வா என மாணவர்கள் வேதனை!

சென்னை, செப்.23-

முதுநிலை மருத்துவப்படிப்புகளுக்கு தகுதி மதிப்பெண் பூஜ்ஜியம் என்று ஒன்றிய அரசு அறிவித்துள்ள நிலையில், நீட் நுழைவுத் தேர்வு கட்டணம் மூலம் ஒன்றிய அரசு ஆண்டு தோறும் 100 கோடி ரூபாய் வசூல் செய்து வருவது அம்பலமாகி உள்ளது.

இளநிலை மருத்துவப் படிப்புகள் மற்றும் முதுநிலை மருத்துவ படிப்புகளில் சேருவதற்கு தகுதித்தேர்வை தேசிய தேர்வு முகமை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது. நாடு முழுவதும் பிளஸ் 2 முடித்த மாணவ-மாணவிகள் நீட் தேர்வு எழுதி அதன் மூலம் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து படித்து வருகின்றனர். இந்த நிலையில், நீட் முதுநிலை தேர்வில் தகுதி மதிப்பெண் பூஜ்ஜியமாக குறைக்கப்பட்டுள்ளது.

நீட் தேர்வில் தகுதி மதிப்பெண் ஜீரோவாக எடுத்திருந்தாலும் எம்.டி, எம்.எஸ்., படிப்புகளுக்கான கலந்தாய்வில் பங்கேற்கலாம் என்று ஒன்றிய அரசின் மருத்துவ கலந்தாய்வுக் குழு அறிவித்துள்ளது. ஒன்றிய அரசின் இந்த அறிவிப்பாணை, நீட் தேர்வின் சூழ்ச்சியை அம்பலமாக்கியுள்ளது. தகுதி மதிப்பெண் பூஜ்ஜியம் எனில், தேர்வு எதற்கு என்று பல்வேறு தரப்பினரும் கேள்வி எழுப்பி உள்ளனர். இந்நிலையில் ஒவ்வொரு ஆண்டும் நீட் முதுநிலை தேர்வு மூலம் ஒன்றிய அரசு 100 கோடி ரூபாய் மாணவர்களிடமிருந்து வசூல் செய்து வருவது தெரியவந்துள்ளது. முதுநிலை மருத்துவப்படிப்புகளுக்கான நீட் தேர்வுக்கு 4 ஆயிரத்து 250 ரூபாய் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதற்கு 765 ரூபாய் ஜி.எஸ்.டி வரியைச் சேர்த்து மாணவர்கள் 5 ஆயிரத்து 15 ரூபாய் கட்டணமாக செலுத்தி வருகின்றனர். கடந்த ஆண்டு மட்டும் 2 லட்சத்து 8 ஆயிரத்து 898 மாணவர்கள் முதுநிலை மருத்துவப்படிப்புக்கான நீட் தேர்விற்கு விண்ணப்பித்துள்ளனர். இவர்களிடமிருந்து கட்டணமாகவும், ஜி.எஸ்.டி வரியாகவும் சராசரியாக 100 கோடி ரூபாயை ஒன்றிய அரசு வசூலித்துள்ளது. நீட் தகுதி மதிப்பெண் பூஜ்ஜியம் என்ற நிலையில், மாணவர்களிடம் இருந்து பணம் வசூலிக்கவா நீட் தேர்வு நடத்தப்படுகிறது என்று மாணவர்கள் கொந்தளிப்புடன் கேள்வி எழுப்பி உள்ளனர்.




தஞ்சை மத்திய மாவட்டக் கழக செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தலைமையில் மாணவர் அணி உறுப்பினர் சேர்த்தல் தொடக்க விழா நடைபெற்றது. உடன் மாவட்ட துணைச் செயலாளர் என்.மணிமாறன், கனவல்லிபாலாஜி, தஞ்சை மாநகர செயலாளர் சண்.இராமநாதன், ஒன்றிய கழக செயலாளர் கெ.கார்த்திகேயன் மாணவர் அணி மாவட்ட அமைப்பாளர் ம.ஆசாத், மாணவர் அணி துணை அமைப்பாளர் மாசி.உதயநிதி கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

### மகளிர் இடஒதுக்கீடு மசோதா - மக்களவையைத் தொடர்ந்து

# மாநிலங்களவையிலும் நிறைவேறியது!

புதுடெல்லி,செப். 23 –

மகளிருக்கு 33 சதவீத இடஒதுக்கீடு வழங்கும் மசோதா மாநிலங்களவையில் நேற்று முன்தினம் நிறைவேறியது.

இந்த மசோதா மீதான வாக்கெடுப்பில் யாரும் எதிராக வாக்களிக்கவில்லை.

நாடாளுமன்ற சிறப்பு கூட்டம் கடந்த திங்கட்கிழமை தொடங்கியது. இக்கூட்டத் தொடர் மொத்தம் 5 நாட்கள் நடைபெறுகிறது.

சிறப்பு கூட்டத்தில் மகளிர் இடஒதுக்கீடு மசோதா தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மசோதா மீதான விவாதத்தில் காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் திருமதி சோனியா காந்தி, கனிமொழி கருணாநிதி எம்.பி., ராகுல் காந்தி, உள்ளிட்ட பல்வேறு கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவாதத்தில் பங்கேற்று பேசினர்.

இதனைத் தொடர்ந்து மக்களவையில் மகளிர் மசோதா நிறைவேறியது.

இதற்கிடையே, மாநிலங்களவையில் மகளிர் இட ஒதுக்கீடு மசோதா



மீதான விவாதம் நேற்று முன்தினம் காலை தொடங்கி தொடர்ந்து நடைபெற்றது.

இந்நிலையில், மகளிர் இடஒதுக்கீடு மசோதா மாநிலங்களவையில் நேற்று முன்தினம் நிறைவேறியது.

215 எம்.பி.க்கள் ஆதரவாக வாக்களித்தனர். ஒருவரும் இந்த மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.